# பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு - A

**இன்றைய வாசகங்கள்:**
அரசர்கள் முதல் நூலிலிருந்து வாசகம் 3: 5, 7-12,
திருப்பாடல் 119: 57,72. 76-77. 127-128. 129-130,
திருத்தூதர் பவுல் உரோமையருக்கு எழுதிய
திருமுகத்திலிருந்து வாசகம் 8: 28-30 ,
மத்தேயு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 13: 44-52

## திருப்பலி முன்னுரை:

திருமகன் இயேசுக் கிறிஸ்துவில் நிறைவாழ்வை நோக்கிப்பயணம் செய்யும் இறைமக்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்துகளையும், வணக்கத்தையும் கூறி மகிழ்கிறேன்.
விண்ணரசுக்குரியவர்களே, பொதுக்காலத்தின் பதினேழாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்களை அன்போடு வரவேற்கிறோம். இறைவனின் அரசில் ஒன்றிணைய அனைத்தையும் இழக்கத் தயாராக இருக்க வேண்டுமென இன்றைய திருவழிபாடு நமக்கு நினைவூட்டுகிறது. விண்ணரசு ஒரு புதையலுக்கும், விலைமதிப்பற்ற ஒரு முத்துக்கும் ஒப்பானது என இயேசு குறிப்பிடுகிறார். தம் சொத்துக்கள் அனைத்தையும் விற்று, புதையல் உள்ள நிலத்தையும், ஒப்பற்ற முத்தை யும் அடைய முயற்சிப்பது போன்று, விண்ணரசை அடைய இவ்வுலகின் நாட்டங்களை கைவிட நாம் அழைக்கப்படுகிறோம். விண்ணரசு என்ற வலையில் சிக்கும் நல்ல மீன்களாக வாழ வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.
பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**உமது பணியாளர்கள்மீது அதிக அக்கறையுடையவரான தந்தையே இறைவா!**
எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் உம்மை நிறைவாக அன்பு செய்யவும், உமது திட்டத்தினை நன்குணர்ந்து செயற்படவும், உமக்காக அனைத்தையும் துறந்து தியாக உள்ளத்தோடு பணிபுரியவும் அவர்களுக்கு வேண்டிய ஞானத்தை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றான தந்தையே இறைவா!**
இறைமக்கள் சமுதாயமாக இருக்கும் நாங்கள், உலகம் காட்டும் வழிகளைப் பின் பற்றாது, உமது வார்த்தை காட்டும் ஞானத்தின்படி வாழுவதற்கு வேண்டிய மனப் பக்குவத்தை எமக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**படைப்பின் நாயகனே எம் இறைவா!**
இவ்வுலகம் உம் இறைவெளிப்பாடு என்பதனை நாங்கள் அனைவரும் புரிந்து கொண்டு ஒருவருக்கொருவர் உதவிப் புரியவும், இருப்பவர்கள் இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவும், அன்பு, மகிழ்ச்சி. பரிவு இவை இன்று மனிதசமுதாயத்தில் நலிவடையாமல் பிறருக்கு உதவிபுரியவும் எடுத்துக்காட்டான வாழ்வு இத்தொற்று நோய் காலத்தில் வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**குழந்தைகள் விண்ணரசின் சொந்தங்கள் என்று மொழிந்த எம் இறைவா,**
எம் குழந்தைகள், இளமையில் அதிகமாக உம்மைத் தேடவும்., உம் வர்த்தைகளை வாழ்வாக்கி, தம் சொல்லாலும் திருஅவைக்கும், மனிதகுலச் சமுதாயத்திற்கும். சான்றுப் பகரும் வாழ்வு வாழத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்..

**குடும்பங்களின் தலைவரே எம் இறைவா!**
இன்றைய நவீன வாழ்விலொன்றுக் கூடிச் செபிக்கவும், உரையாடவும், உறவுகளை மேம்படுத்தவும், மதிக்கவும் நாங்கள் மறந்திருக்கின்றோம். நீர் கொடுத்த இந்த உறவுகள் உண்மையான, மகிழ்ச்சி நிறைந்த வாழ்வை வழங்கிடவும், குடும்பங்களில் கூடிச் செபிக்கவும், இறை அழைத்தலை அதிகமாக ஊக்குவிக்கவும், எம் குடும்பங்கள் திருக்குடும்பங்களாக மாறிடவும், தொற்றுநோயின் தாக்கத்திலிருந்து அனைவரையும் காத்திடத் தேவையான அருளைப் பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்..

**பேரின்பப் பரம்பொருளே! எம் இறைவா!**
எம் இளைய தலைமுறையினர் இவ்வுலகக் கவர்ச்சியால் தங்களை இழந்து, தங்கள் வாழ்வையும், தமக்கு அடுத்திருப்பவர்களையும் ஒரு சுமையாகக் கருதி அல்லல் படும்போது அவர்களுக்குத் தூயஆவியின் வழிகாட்டுதலும், நேரியவழியையும் அமைத்துத் தந்துத் தங்கள் வாழ்வைச் சுகமான சுமையான வாழ்வாக வாழ்ந்திடத் தேவையான வரங்களைப் பொழியவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நலம் அளிக்கும் வல்லவரே! எம் இறைவா!**
இந்தத் தொற்றுநோய்க்கு எதிராய் தன்னலம் கருதாமல் போராடுபவர்கள் அனைவரையும் காத்தருளும். அன்பும், பொறுமையும், கருசனையும் அளித்து உயிர்களைக் காத்திடும் பணியைச் செவ்வனே செய்திட அவர்களுக்குப் பக்கபலமாய் இருக்கவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.